# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.

## PROSECUTION OF WITNESS

## CC.No.444/2025

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **06.08.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused absent.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW–5 : திரு.கலைசெல்வன் த/பெ மாது**

**முதல் விசாரணை**

நான் சிவாடியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையது. கடந்த 12ம் தேதி 2வது மாதம் 2வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்த அடுத்த நான் விபத்து நடந்த இடமான சேசம்பட்டி ஜங்சன் அருகே காவல் துறையினர் காலை சுமார் 09.30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் நானும், இளங்கோவன் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த விபத்து குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னுடைய வீட்டிற்கும் சம்பவ நடந்த இடத்திற்கும் சுமார் 3 ½ கி.மீ இருக்கும். இந்த விபத்தில் இறந்தவர் என்னுடைய ஊர்காரர் மற்றும் உறவினர் என்றால் சரிதான். நான் கையெழுத்து இட்ட தாளில் என்ன எழுதி இருந்தது என்று தெரியும், அதில் மேப் வரைந்து இருந்தது. நான் காவல் நிலையத்தில் கையெழுத்து இடவில்லை, சம்பவ இடத்தில் தான் கையொப்பம் செய்தேன். நான் ஒரு கையெழுத்து செய்தேன். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், போலிசார் கேட்டுகொண்டதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.08.06 15:03:42 +0530

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.**

**PROSECUTION OF WITNESS**

**CC.No.444/2025**

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **06.08.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused absent.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW–6 : திருமதி.லதா (காவல் ஆய்வாளர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.02.2025 ம் தேதி காலை 08.30 மணிக்கு அதியமான்கோட்டை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் நெடுஞ்செழியன் என்பவர் பணியில் இருந்தபோது விபத்து நடந்தது சம்மந்தமாக சிவகாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று கொண்டு அதியமான்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 46/2025, பிரிவு 281, 106 BNS ஆக TN 29 CY 4890 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநர் மீது முதல் பதிவு அறிக்கை பதிவு செய்தார். சம்பந்தபட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் பிற ஆவணங்களையும் குற்றவியல்நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும், பிற ஆவணங்களை எங்களுடைய உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார். பின்பு வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக எனது மேற்பார்வையில் வைத்ததின்பேரில் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு, 12.02.2025 அன்று காலை 09.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் இளங்கோவன், கலைசெல்வன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் தயார் செய்தும், பார்வை மகஜர் தயார் செய்தேன். இவ்வழககின் சாட்சியாக சிவகாமியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோன அருள் என்பவர் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் பிரேத விசாரணை சாட்சிகள் கிருஷ்ணன், முருகம்மாள், மகேந்திரன், துரை ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கேள்விபட்ட சாட்சியான ரமேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் பயன்படுத்திய வாகனங்களான TN 29 CY 4890 என்ற மகேந்திரா பொலிரோ வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் தரணீதரன் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். பின்பு இவ்வழக்கின் எதிரி ராஜமாணிக்கம் என்பவரை அதியமான்கோட்டை காவல் நிலையம் வந்து 14.02.2025

அன்று 10.50 மணிக்கு கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். இந்த வழக்கில் இறந்துபோன அருள் என்பவரை மருத்துவ பரிசோதனை செய்து, போலிஸ் இன்டிமேசன் அளித்த மருத்துவர் பிரபாவதி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இறந்துபோன அருள் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சபரிநாதன் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோன அருள் என்பவரின் பிரேதத்தை ஆஜர் செய்த முதல்நிலை காவலர் கோபி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் நெடுஞ்செழியன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் புலன் விசாரணையை முடித்து கொண்டு நிலையம் வந்து 27.04.2025 அன்று எதிரி ராஜமாணிக்கம் என்பவர் மீது 281, 106 BNS இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5, பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6, TN 29 CY 4890 என்ற மகேந்திரா பொலிரோ வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7, விபத்து பதிவேடு அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 70 அடியில் தாரணி மளிகை கடை, 90 அடியில் குணசேகரன் டீ கடை, 110 அடியில் வெங்கடேஸ்வரா பேக்கரி கடை அமைந்துள்ளது என்று வரைபடத்தில் காட்டியுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள எந்த ஒரு கடைக்காரர்களையும் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் பார்வை மகஜரில் காட்டப்பட்டுள்ள இளங்கோவனிடம் 161 வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி போன் மூலம் ரமேஷ் என்பவருக்கு தகவல் கொடுத்த எல்&டி ஊழியரை நான் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நேரில் சென்று உரிய புலன் விசாரணை செய்யாமல் புகார்தாரரின் உறவினர்களை காவல் நிலையத்திற்கு வரவைத்து நீங்கள் தயாரித்த வழக்கு ஆவணங்களில் கையொப்பம் வாங்கியும், எதிரிக்கு எதிராக பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரியை நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.08.06 15:03:49 +0530